සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

# இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2019(II)

காலம் - 03 மணித்தியாலங்கள்

## குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (01-III)

විභාග අංකය
Index No / சுட்டெண்
......................................

- **05 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.**

1. i. இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் தாபன விதிக் கோவை என்பவற்றில் அரச அலுவலர் தொடர்பான பொருள்கோடல் வழங்கப்பட்டுள்ளது. தண்டணைச் சட்ட கோவையின் கீழ் "அரசு அலுவலர்" தொடர்பான பொருள் கோடல் எவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பதை விளக்குங்கள். (10 புள்ளிகள்)

   ii. தண்டணைச் சட்ட கோவையின் கீழான "அரசு அலுவலர்" தொடர்பான பொருள் கோடலும் அரசியலமைப்பு மற்றும் தாபன விதிக் கோவை என்பவற்றில் கீழான அரச அலுவலர் தொடர்பான பொருள்கோடலும் வேறுபடும் முறையை விளக்குக. (10 புள்ளிகள்)

2. நீதிமன்றத்தில் ஆவண சான்றுகளை சமர்ப்பிக்கும் போது, சான்றுகள் முதன்மை சான்றாகவும், இரண்டாம் நிலை சான்றாகவும் சமர்ப்பிக்கும் வழக்குகள் உள்ளன. முதன்மை ஆவண சான்றுகள் மற்றும் இரண்டாம் நிலை ஆவண சான்றுகள் பற்றி விரிவாக விளக்குக. (20 புள்ளிகள்)

3. A என்பவர் விஜிதபுர பிரதேச செயலாளர் ஆவார். ஒரு கடமை நாளொன்றில், சிவில் உடைதரித்த ஒரு குழுவினர் காணிப்பிரிவின் முகாமைத்துவ சேவை அலுவலரான B இனை கைவிலங்கிட்டு A இன் அலுவலகத்திற்குள் அழைத்து வந்தனர். C யிடம் இலஞ்சம் வாங்கியது தொடர்பாக B கைது செய்யப்படுவதாக அந்த நபர்கள் தெரிவித்தனர். அந்த நபர்கள் தமது உத்தியோகபூர்வ அடையாள அட்டையை காண்பித்ததுடன், தாங்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் எனவும் மேலும் தெரிவித்தனர். C தொடர்பான காணிப்பிணக்கொன்று இருப்பது A இற்கு அச்சந்தர்ப்பத்தில் நினைவுக்கு வந்தது. A இடமிருந்து வாக்குமூலம் பெற்ற ஆணைக்குழுவின் அதிகாரிகள், B இலஞ்சம் வாங்கும் போது அதே இடத்தில் பணிபுரிந்த சமூக சேவைகள் விடயத்திற்கு பொறுப்பான முகாமைத்துவ சேவை அலுவலர் D மற்றும் C ஆகியோரை பின்னர் ஆணைக்குழுவிற்கு அழைத்து வாக்குமூலங்களை பதிவு செய்துகொண்டுள்ளனர்.

   i. நீதிமன்ற வழக்கு நடவடிக்கையின் போது ஆணைக்குழுவினால் வழக்குத்தொடுனர் சார்பான சான்றாக A, B, C மற்றும் D ஆகிய நபர்களில் யாரை பயன்படுத்தலாம்? விவரிக்குக. (12 புள்ளிகள்)

ii. A, B, C, D ஆகியோரின் சாட்சிகளில் யாரை வழக்குத் தொடுனர் சார்பில் கண்ணால் கண்ட (eyewitness) சாட்சியாக பயன்படுத்தலாம்? பதிலை விளக்குக. (8 புள்ளிகள்)

4. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ், மனித உடல் மற்றும் உயிரைப் பாதிக்கும் குற்றங்களின் கீழான பின்வரும் குற்றங்களில் 04 இனை தெரிவு செய்து சிறு குறிப்பு எழுதவும்.

i. கொலை (Murder)
ii. குற்றத்திற்கிடமான மனித உயிர் போக்கல் (Culpable Homicide)
iii. கற்பழிப்பு (Rape)
iv. ஆட்கவர்தல் (Kidnaping)
v. ஆட்கடத்தல் (Abduction)
vi. குற்றமுறை வலோற்காரம் (Criminal Force)
vii. காயம் விளைவித்தல் (Causing Hurt)
viii. கருச்சிதைவு (Miscarriage) (5X4 = 20 புள்ளிகள்)

5. A என்வர் சமகிபுர பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஆவார். சிறிது காலம் வெளியூர் சென்றிருந்த A, கிராமத்திற்குத் திரும்பி வந்து, தான் கிராமத்தில் இல்லாத காலப்பகுதியில், பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றதாகவும், விரைவில் அப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார். இந்த அறிக்கையை கேட்ட B, தன்னுடன் தொடர்புபட்ட பொலிஸ் கடமையை செய்யவதற்காக எனக் கூறி, மதிப்புமிக்க வெளிநாட்டு மதுபான போத்தலை A க்கு கொடுத்தார். இங்கே, A, B இன் தேவையை நிறைவேற்றுவதாக உறுதியளித்து, குறித்த உதவியைப் பெற்றார். ஆனால் உண்மையில் A பொலிஸ் கல்லூரியில் பயிற்சி பெறவில்லை என்பதிடன் அவர் பொலிஸில் எந்த பதவியையும் வகிக்கவில்லை. (20 புள்ளிகள்)

தண்டனைச் சட்டக் கோவையின் படி உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமுறையான ஊதியத்தினை தவிர வேறு கட்டணம்தவிர வேறேதேனும் அவாநிறைவொன்றை (gratification) பெறும் போதான குற்றத்தை விவரிப்பதன் மூலம் மேற்கண்ட A குற்றத்தைச் செய்தாரா என்பதை விளக்குக.

6. சான்று கட்டளைச் சட்டத்திற்கமைய தரப்பட்டுள்ள பின்வரும் விடயங்களில் 04 விடயங்கள் தொடர்பாக சிறு குறிப்புகளை எழுதவும்.

i. ஒப்புதல்கள் (Admissions)
ii. குற்ற ஒப்புதல்கள் (Confessions)
iii. நிகழ்வுகள் (Facts)
iv. சாட்சி விசாரணைகளின் ஒழுங்கு முறை (Order of Examination)
v. நிபுணர்களின் அபிப்பிராயம் (Expert Opinion) (புள்ளிகள் 5X4 = 20)

**************